# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.92/2019 RCOP: /

இந்த நீதிமன்றத்து உதவியாளர் செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 20.09.2025

பெயர் சசிகுமார் தந்தை/ கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>:–

1. 25.02.2019 Complaint filed with T–3 Korrattur Police station regarding the illegal construction with original postal receipt வா.சா.ஆ 1

2. 25.02.2019 Complaint lodged with the corporation of chennai with original postal receipt வா.சா.ஆ 2

3. 25.02.2019 Notice sent to Defendant with original postal receipt வா.சா.ஆ 3

4. Form 6 Register of Plainitff Temple Compared with Original வா.சா.ஆ 4

5.08.12.1998 Property Register of Plaintiff Temple Compared with Original வா.சா.ஆ 5

6. 16.09.2016 Show cause notice u/s 78 of HR & CE Act True copy வா.சா.ஆ

7. 30.10.2018 Proceeding of the Commissioner HR &CE True copy வா.சாஆ 7

8.Digital Photographs with 63(4) certificate வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u> :–

1. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாடகை சரியாக கட்டவில்லை என்றும் வாடகைக்கு கொடுத்த கட்டிடத்தை இடித்துவிட்டதால் வழக்கு தாக்கல செய்துள்ளேன். பிரதிவாதி இன்றைய தேதி வரை வாடகை பாக்கி இல்லாமல் முழுவாடகை தொகை செலுத்தி உள்ளார் என்றால் சரிதான். இன்றைய தேதிவரைக்கும் பிரதிவாதிக்கு வாடகை பாக்கி இல்லை. கட்டிடம் சேதம் அடைந்ததாக 2.06.2017 அன்று பிரதிவாதி எனக்கு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் பிரதிவாதி அனுப்பிய கடிதம் என்றால் சரிதான். (**02.06.2017 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பு பி.சா.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அது நகல் ஆவணமாக இருப்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)**

2. 22.01.2019 அன்று HR & CE இணைஆணையருக்கு பிரதிவாதியிடம் இருந்து பராமரிப்பு பணிகள் செய்வதற்கு அங்கிகாரம் வழங்க கோரி கடிதம் அனுப்பபட்டது என்றால் சரிதான். (2**2.01.2019 தேதியிட்ட பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பு பி.சா.ஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அது நகல் ஆவணமாக இருப்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)** அதற்கு

இணைஆணையர் 22.01.2019 அன்று தீர்மானம் ஏற்படுத்தினார் என்றால் சரிதான். (2**2.01.2019 தேதியிட்ட இணைஆணையர் ஏற்படுத்திய தீர்மானம் பி.சா.ஆ 3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அது நகல் ஆவணமாக இருப்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**) அதற்கு நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டது என்றால் அதற்கு நிர்வாக அனுமதி பரிந்துரைக்கப்பட்டது.

3. கோவில் நிர்வாகம் தீர்மானித்த புதுப்பித்த வாடகையை பிரதிவாதி தற்போது தேதிவரை கட்டிவிட்டார் என்றால்சரிதான். வா.சா.ஆ 1 புகார்மேல் பிரதிவாதியை அழைத்து காவல்ஆய்வாளர் எந்த விசாரணையும் நடத்தவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 22.01.2019 வழங்கிய தீர்மானத்தின் படி கட்டிடத்தை பராமரிப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் பிரதிவாதி கட்டிடத்தை இடித்து பராமரிப்பு பணிமேற்கொண்டார் என்றால் இணைஆணையர் உத்தரவு வழங்கிய பிறகுதான் பணிகளை மேற்கொள்ளமுடியும். பிரிவு 78 of HR & CE Act ன் கீழ் இணைஆணையர் முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு இணைஆணையர் MP. 52/2016 மனுவில் 28.11.2018 அன்று வழங்கிய உத்தரவின் படி பிரதிவாதி முழுதொகையும் கட்டிவிட்டதால் அவருக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். ( **28.11.2018 அன்று இணைஆணையர் வழங்கிய உத்தரவின் நகல் பி.சா.ஆ 4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. அது நகல் ஆவணமாக இருப்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**) சொத்து உரிமையை திரும்பபெறுவதற்கு பிராதில் எந்த சரியான காரணமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வாடகை சொத்தில் அனைத்து வரிகள்மற்றும் வாடகை தொகை சரியாக

செலுத்தி வருவதால் வழக்குசொத்து பராமரிப்பு பணி செய்ய அவருக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.